1990 மே 8]

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4 மாதங்களுக்குள் விரைவாக கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதற்கு இடையிலே அங்கே மின் திருட்டு தடுப்புக் குழுவினர் என்ற ஒரு அமைப்பு அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு மின்சாரம் திருடுகிறார்கள் என்ற முறையிலே அடிக்கடி தொல்லை கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் ஆழமாகப் போய் விட்ட இந்தக் காலக்கட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தக் குழுவினர் ஏராளமாகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். ஆகவே, வாலண்டரி டிஸ்குளோஷர் என்ற அமைப்பின் கீழ் தயவுசெய்து இதைவிட அதிகமாகக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூடுதல் மின்சாரம் வழங்கவேண்டும் என்பது தான் இதிலே, கொடுக்கப்பட்டு இருக்கிற முக்கிய நோக்கம். மின்சாரத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்று தனியாக ஸ்குவாட் இருக்கிறது. அதை அது போய் கண்டு பிடிக்கிறது. அதற்கும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. திருடர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்த ஸ்குவாட் கண்டுபிடிக்கும். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின்சாரம் வழங்க வேண்டுமானால் அதிகத் திறன் உள்ள மின் மாற்றிகளும், கூடுதல் திறன் உள்ள மின் கம்பிகளும் தேவை. அதற்காக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த மாதத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு 40 இணைப்புகள் வீதம் அந்த 150 பேருக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்